# வேட்டுவர் வணிக இதழ்

FOR INTERNAL CIRCULATION ONLY **AUGUST – 2021**



**வேட்டுவமன்னர்**
**வல்வில் ஓரி**
**சிறப்பிதழ்**

**ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே**

**மாத இதழ்**

AUGUST – 2021

**ஆசிரியர்**

கவிதா வாழைபரமேஸ்வரன்

**இணை ஆசிரியர்**

Dr.வாழைபரமேஸ்வரன்

**வடிவமைப்பு**

கவிதா வாழைபரமேஸ்வரன்

**அட்டைப்பட உதவி**

KKS.சின்னக்கவுண்டர்

**MOBILE**

90037 95243

**EMAIL**

vgbusinesstycoons@gmail.com

**WEBSITE**

vgtycoons.com

**For Internal Circulation Only**


பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே...


# முகப்புரை

VG BUSINESS MAGAZINE வெற்றிகரமாக நமது சொந்தங்களிடம் சென்றடைந்ததில் மிக்க மகிழ்ச்சி. Magazine னை வாட்ஸ்அப் மற்றும் ஃபேஸ்புக் குரூப்களுக்கு ஷேர் செய்த உறவுகளுக்கு நன்றி. வாழ்த்துச் செய்திகளை அனுப்பிய சொந்தங்களுக்கு நன்றி. நீங்கள் அனுப்பிய ஒவ்வொரு வாழ்த்து செய்தியும் எங்களை மேலும் மேலும் உற்சாகப்படுத்துகிறது. நமது சமுதாயத்திற்காக மேலும் கடினமாக உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. கொல்லிமலையை ஆண்ட வேட்டுவமன்னர் வல்வில் ஓரியின் விழா வரும் ஆடி 18 ல் கொண்டாடப்பட உள்ளதால் வல்வில் ஓரியின் பெருமையை போற்றும் வகையில் இம்மாத இதழ் வேட்டுவ மன்னர் வல்வில் ஓரி சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது. படித்து பயன்பெறுங்கள். நமது சமுதாயத்தை மேம்படுத்துவதற்காக நாம் ஒவ்வொருவரும் ஒன்றிணைவோம்... வணிகத்தில் மேம்படுவோம்...



**கவிதா வாழைபரமேஸ்வரன்**




மிக மிக அருமை. நல்லதோர் ஆரம்பம். முதல் முயற்சி என்பதே தெரியவில்லை. மென்மேலும் பொலிவு பெற வாழ்த்துக்கள்.

— A.சக்திவேல்
மாரப்பம்பாளயம்புதூர்

போற்றத்தக்க முயற்சி. அதுவும் inspiration section is good. திரு. வடிவேலு அவர்களின் முன்னேற்றம் மெச்சத்தகு ஒரு குணாதிசயம் அவரின் humility. ஒவ்வொரு தொழில் முனைவோருக்கும் தேவையான ஒன்று. உங்கள் பணி தொடரட்டும். இந்த முயற்சி வெற்றியடைய வாழ்த்துக்கள்.

— V.K. Shanmugam

நல் வாழ்த்துக்கள். VG பிசினஸ் மாத இதழ் அருமையான வடிவமைப்புடன், நல்ல தரத்துடன், எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் சூப்பராக வந்துள்ளது. உங்களின் இந்த சீரிய முயற்சிக்கு நல் வாழ்த்துக்கள். இந்த மாத இதழ் நமது சமுதாயத்தை மேலும் உச்சத்திற்கு கொண்டு செல்லும். உங்களின் இந்த முயற்சி வெற்றிபெற நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

— பி.ரமேஷ், தினத்தந்தி
ரிப்போர்ட்டர், கவுந்தப்பாடி

வாழ்த்துக்கள். மென்மேலும் புதிய புதிய நுட்பங்களை நமது சமுதாயத்துக்கு வழங்குங்கள். வாழ்க நம் சமுதாயம், வளர்க நம் சமுதாயம். வெற்றியை நோக்கி சரியானபாதையில் செல்கிறோம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மிகவும் பெருமையாக இருக்கிறது. வெல்க வேட்டுவக் கவுண்டர் குலம்... ஓங்குக வேட்டுவக்கவுண்டர் குலம்...

**– திரு.ராமசாமி**

**Winners Engineering Company**

மிக நல்ல முயற்சி தொடரட்டும் இந்த பணி, வாழ்த்துக்கள்.

**– திரு.சிவ இளங்கோ**

**Insurance Factory**

உங்கள் மாபெரும் முயற்சி வெற்றி பெற வாழ்த்துக்கள்.

**– NSDL ALTRUISTINDIA**

சூப்பர் அக்கா! என்னுடைய சப்போர்ட் எப்பவும் உங்களுக்கு இருக்கும். வாழ்த்துக்கள்.

**– நித்யா கோகுலசந்தானகிருஷ்ணன்**

பத்திரிக்கையின் கருத்துக்கள் மிகச் சிறப்பாக இருந்தது. எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன்...

**– திரு. யுவராஜ் பழனிசாமி**

வாழ்த்துக்கள். நமது சமுதாய மக்கள் தொழில்துறையில் நுழைந்து போட்டியிட, நிலைத்து நிற்க நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு பணியும் போற்றுதற்குறியது. தன்நலன் பாறாது நீங்கள் செய்யும் ஒருங்கிணைப்பு சேவைக்கு நன்றி.

**– Mrs. Selva Thilagavathi**

சிறப்பான முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. நமது சமுதாய வளர்ச்சிக்குப் உதவும் வகையில் உள்ளது. இனிய ஆரம்பம். VG BUSINESS MAGAZINE க்கு எனது வாழ்த்துக்கள்.

**– திரு. லோகநாதன்**

இன்று வேட்டுவர் வணிக இதழ் முதல் பிரதியை பார்த்தேன். மிகவும் அருமை, சிறப்பான முயற்சி. வாழ்த்துக்கள் சகோதரி

— V. தயாநிதி, ஓசூர்

ஆகச் சிறந்த செயல், இதன் மூலம் புதிதாக தொழில் தொடங்கும் நமது சமுதாய உறவுகளுக்கு தன்னம்பிக்கையும் உத்வேகத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

— திரு.வேலுச்சாமி

வேட்டுவ கவுண்டர் குலம் இத்தனை வகையினர் என்பதை வெளிப்படுத்திய VG Business Magazine ஐ பாராட்டி வாழ்த்துகிறேன்.

— Mr.N.Duraisamy. LIC

மிக சிறந்த முயற்சி. தொடர்ந்து நம் மக்களின் ஆதரவு மேலும் பெருக வேண்டுகிறேன்.

— திரு.சசிகவுண்டர்

Its all your hard work. You have really done a great job. While seeing magazine only I realize how much effort you have done...keep going mam.

— Mrs.Kogila

We are so proud about this step in our VG tycoons path... We are here to support all the programs to develop our community in the business fronts.

— Mr. Moorthi

VG Business Magazine is super. It's neat and looks good and the content and way of narrating also good. Wish you all the Best.

— Dr.K.Saravanan

Shivaani Collections

Really you are doing great work sister.

— Mrs.Raji



## மலேசியாவில் வேட்டுவகவுண்டர்

# முருகன் முத்துசாமி

மலேசியா என்றவுடன் நம் நினைவுக்கு வருவது உழகப்புகழ் பெற்ற முருகன் கோவில் தான். அந்த வேட்டுவக்கடவுள் முருகனின் பெயர் கொண்ட ஒருவரைப் பற்றி தான் இங்கு பார்க்கப் போகிறோம்.



மலேசியாவில் கல்விபணியுடன் சமுதாய பணியும் செய்து வருகிறார் திரு. முருகன் முத்துசாமி கவுண்டர் அவர்கள். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்கிற பழமொழிக்கு ஏற்ப சுமார் 86 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1935 ம் ஆண்டில், தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், கல்லாங்காட்டு வலசு பகுதியில் அமைந்துள்ள உப்புகுளம் என்கிற கிராமத்திலிருந்து மலேசியா சென்றவர் தான் இவரது தாத்தா

திரு.ரெங்கையா கவுண்டர் (கருப்பையா). அவரது மனைவியின் பெயர் திருமதி. சின்னம்மாள். இவர்களுக்கு 3 ஆண் பிள்ளைகள் முறையே செங்கோடம், முத்துச்சாமி மற்றும் ரெங்கசாமி. இவர்களில் 2 வது மகன் முத்துச்சாமிகவுண்டரின் மகன் தான் திரு.முருகன் முத்துசாமி கவுண்டர் அவர்கள். இவர் மலேசியா, ஜோடர் மாநிலத்தில் உள்ள சா'ஆ கிராமத்தில் பிறந்தவர். இவரது தாயாரின் பெயர் திருமதி. இலட்சுமி அம்மாள்.



மலேசியாவில் பிறந்து வளர்ந்த இவர் மலேசியாவிலேயே தமிழ் பள்ளியில் கல்வி கற்ற பின்னர் கல்லூரி படிப்பையும் முடித்துள்ளார். 1990 ல் தமிழ்ப்பள்ளி ஆசிரியராக பணியை துவங்கிய இவர் குடும்ப சூழ்நிலை காரணமாக ஒரு தனியார் கம்பனியில் குமாஸ்தாவாக தனது பணியை தொடங்கினார். பின்னர் 1995 ம் ஆண்டில் தமிழ் மாணவர்களுக்காக ஒரு தனியார் பாலர் தமிழ்ப் பள்ளியை துவங்கினார். அதற்கு சரஸ்வதி பாலர் பள்ளி என்று பெயர் சூட்டினார். இன்று சுமார் 26 ஆண்டுகள் ஆகிவிட்டன. தொடக்கத்தில் சுமார் 30 மாணவர்களோடு துவங்கிய இப்பாலர் பள்ளி, பல சாதனைகளையும் சோதனைகளையும் சந்தித்தது. தற்பேது இவர்களுக்கு சொத்தமான கட்டிடத்தில் சிறப்பாக செயல்பட்டுவருகிறது.



சரஸ்வதி பாலர் பள்ளி - மலேசியா.

சரஸ்வதி பாலர் பள்ளியில் LKG, KG, UKG என்ற 3 படிநிலைகள் உள்ளன. சுமார் 150 - 180 மாணவர்கள் வரை கல்வி கற்று வருகின்றனர். இங்கு 10 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. பரமேஸ்வரி முருகன் ஆவார். இவர் கடந்த 20 வருடங்களாக இப்பாலர் பள்ளியை சிறப்பாக வழி நடத்தி வருகிறார். சரஸ்வதி பாலர் பள்ளியில் முழுக்க தமிழ் மாணவர்களே பயில்கின்றனர். இங்கு பயின்ற முன்னாள் மாணவர்கள் சங்கம் உள்ளது. பழைய மாணவர்கள் அவர்களால் ஆன உதவிகளை பள்ளிக்கும் மக்களுக்கும் செய்து வருகின்றனர். இப்பாலர் பள்ளியில் பயின்ற பலர் இன்று ஆசிரியர்களாகவும், மருத்துவர், பொறியாளர், வழக்குறைஞர், அரசு அதிகாரிகளாகவும் பணி புரிகின்றனர்.







மூத்த மகன் சிவசங்கர்முருகன் சிங்கப்பூரில் கப்பல்துறையில் பணிபுரிகிறார். மகள் நாகேஸ்வரி முருகன் தனது இளங்கலை பட்டப்படிப்பை மழலையர் துறையில் மலேசியா சிலாங்கூர் பல்கலைக்கழகத்தில் (UNISEL) முடித்துள்ளார். இளைய மகன் ஆதிசங்கர்முருகன் இவ்வாண்டு பத்தாம் வகுப்பு படித்து வருகிறார்.

திரு. முருகன் முத்துசாமி அவர்களின் மனைவி திருமதி. பரமேஸ்வரி முருகன் அவர்களும் மலேசியா நாட்டிலேயே பிறந்து வளர்ந்த தமிழ் பெண் ஆவார். இத்தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். 2 ஆண், 1 பெண். மூத்த மகனின் பெயர் சிவசங்கர்முருகன், மகளின் பெயர் நாகேஸ்வரி முருகன், கடைக்குட்டி மகனின் பெயர் ஆதிசங்கர் முருகன்.





திரு.முருகன் முத்துசாமி கவுண்டர் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக மலேசிய அரசியலிலும் கால் பதித்து வருகிறார். மக்கள் நீதி கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு மக்கள் சேவையும் செய்து வருகிறார். மலேசியப் பொதுத் தேர்தலில் இரண்டு முறை சட்டமன்றத்திற்கு போட்டியிட்டு உள்ளார். கடந்த 2018 பொதுத் தேர்தலில் மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை பறிகொடுத்தார். பிறகு இவரது அரசியல் பணியை உணர்ந்த மாநில அரசு இவரை மாநில முதல்வரின் சிறப்பு அதிகாரியாக நியமனம் செய்தது. முதல்வர் அலுவலகத்தில் இந்தியர்களின் சிறப்பு பிரதிநிதியாக பணியாற்றினார்.



Naalanda Global Management PL, Agro Organic Resources PL இந்த இரண்டு கம்பெனிகளையும் இவர் நடத்தி வருகிறார். கடந்த ஒன்றரை வருடங்களாக கொரோனா பாதிப்பினால் மலேசியாவில் பொது நலன் கருதி முடக்க நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் இவரின் கம்பெனியும் தற்காலிகமாக முடக்க நிலையை கடைபிடிக்கிறது. விரைவில் பாதிப்பு குறைந்து இயல்பு நிலை திரும்பும் என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.



Agro Organic Resources PL கம்பெனியானது முழுக்க முழுக்க விவசாயத் துறை சார்ந்தது. தமிழ்நாட்டிலிருந்து இயற்கை உரங்களை மலேசியாவிற்கு கொண்டு வருவதற்காக மாநில முதல்வர் அலுவலகத்தில் ஸ்பெஷல் ஆபீஸராக இருந்த போது இந்த முயற்சியில் இறங்கினார்.





நாடு கொரோனா பாதிப்பிலிருந்து மீண்ட பிறகு, நிலைமை சீரானபிறகு, எப்போதும் போல பணிமனைகள் திறக்கப்பட்டு, தமிழ்நாட்டுடன் சிறப்பாக வணிகம் செய்வோம் என்கிற நம்பிக்கை உள்ளது என்கிறார். தன் கல்வி பணியுடன் அரசியல் மற்றும் வணிகமும் தொடரும் என்றும் கூறுகிறார். வேட்டுவகவுண்டர் உறவுகளுக்கு எல்லா நலமும் வளமும் பெற தன் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.





# கொல்லிமலையை ஆண்ட வேட்டுவமன்னர்

# வல்வில் ஓரி



தமிழன் என்றவுடன் நம் மனதில் தோன்றுவது நம்பிக்கை, வீரம், வெற்றி, கொடை, அன்பு, காதல், ஒழுக்கம், கல்வி, அறிவு, கற்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளையும் தாண்டி பக்தி என்ற உணர்வு நமக்குள் தோன்றுகிறது. இவை அனைத்திற்கும் முக்கிய காரணம் இதை உருவாக்கி கொடுத்த நம் முன்னோர்கள். இத்தகைய பெருமை மிக்க, சிறப்பு மிக்க தமிழர்கள் யார்? இந்த கேள்விக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் தெளிவாகவும் உறுதியாகவும் இலக்கணம் வகுத்து கொடுத்து உள்ளார்.




தொல்காப்பியர், சொல்லுக்கும் எழுத்துக்கும் இலக்கணம் எழுதியுள்ளார்.அதுமட்டுமல்லாமல் உலகத்திலேயே முதன் முதலாக பொருளுக்கும் இலக்கணம் எழுதியுள்ளார். தொல்காப்பியர் எழுதிய பொருளதிகாரம் தமிழ்நாட்டின் நிலங்கள், அங்கு வாழும் மக்கள், அவர்களின் தலைவர்கள், அவர்களின் கடவுள், அங்கு வாழும் விலங்கு, பறவைகள், பூ செடி கொடி என அனைத்திற்கும் முறையான உரிமையாளர்கள் யார் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் தமிழ் நிலங்களை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்று ஐந்து வகைப்படுத்தி உள்ளார். அதில் முதன்மையானது மலையும் மலை சார்ந்த நிலமான குறிஞ்சி நிலம் ஆகும். குறிஞ்சி நிலத்திற்கு உரிய முதல், கரு, உரி பொருள்களைப் பற்றி நமக்கு மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சி நிலத்தின் **கடவுள் - முருகன், தலைவன் / அரசன் - வேட்டுவர்,** மக்கள் - குறவர்கள், விலங்கு - வேங்கை, யானை, புலி போன்றவற்றை தெளிவாக குறிப்பிட்டுள்ளார். வேட்டுவர் என்பதன் வேர்ச்சொல் வேடுவர் என்பதாகும். வேடுவர் என்று சொன்னால் பாதுகாப்பவர், அரசன், தலைவன், என்று பொருளாகும். ஆதிகாலத்தில் குறிஞ்சி நிலத்தின் மலையில் வாழ்ந்த இனக்குழுக்களான வேடுவர்கள் தன் மக்களை பாதுகாக்க அல்லும் பகலும் 24 மணி நேரமும் பாதுகாப்பாக ஒரு வேடு போல் காத்து நின்றனர். இவர்கள் தன் மக்களை விலங்குகள், மற்றும் பகைவர்கள் அணுக முடியாத வகையில் ஒரு வேடு போல் பாதுகாப்பாக காத்து நின்றனர்.

வேடு எவ்வாறு நீரை வடிகட்டி சுத்தமான நீராக கொடுக்குமோ, அந்த வேடு துணி போல் இவர்கள் பாதுகாப்பாக நின்றார்கள். தேனை வடிகட்டும் போது அதில் இருக்கும் கசடுகளை நீக்கி சுத்தமானதாக கொடுக்கும் அந்த வேடு போல் வேடுவர்கள் தன் மக்களை பாதுகாத்து வந்தனர். அதனால் தான் குறிஞ்சி நில தலைவர்களை வேட்டுவர் என்று அழைத்தனர். இவர்களே பிற்காலத்தில் தலைவராகவும், வேளிராகவும், அரசனாகவும் அவர்களின் பட்ட பெயர்களுடன் ஆட்சி செய்து வந்தனர். பாண்டியன், ராயர், நாயகர் போன்ற பட்டங்களுடன் வாழ்ந்தனர். கொங்கு நாட்டில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் வேட்டுவ கவுண்டர்கள் தான் உலகில் முதன் முதலாக இனக்குழுக்களால் உருவான அரசாட்சியை உருவாக்கினார்கள். இதை பல அறிஞர்களும் உறுதிப்படுத்தி உள்ளார்கள். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் எய்னர், பொறையர், குறவர், கொடிச்சி, குறத்தி என்றும் அழைக்கப்பட்டனர். வேட்டுவ அரசர்களைப் பற்றிய எண்ணற்ற குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க வேட்டுவ அரசர்களில் ஒருவர் கொல்லிமலையை ஆண்ட அரசர் வள்ளல் வல்வில் ஓரி.



குறிஞ்சி பூக்கள்

நாம் செய்யும் நன்மையும் தீமையும் அடுத்த ஜென்மத்தில் நமக்கு சொர்க்கமா அல்லது நரகமா என்பதை தீர்மானிக்கும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். ஆனால் பிறக்கும்போதே சொர்க்கத்தில் தான் பிறந்தோம் என்று சங்க காலத்தில் வாழ்ந்த வேட்டுவர்கள் நிரூபித்துள்ளார்கள். அவர்கள் வாழ்ந்த குறிஞ்சி நிலம் சொர்க்கம் போல் உயர்ந்த மலையின் உச்சியில் மேகக்கூட்டங்களும், அங்கிருந்து கொட்டும் அருவிகளும், ஆனந்தமாய் பாடும் குருவிகளும், அருவியில் குளித்து மகிழும் மந்தியும், யானை, புலி, கரடி என்று விலங்குகள் நிறைந்த காடும், விலைமதிப்பற்ற ஈட்டி, வேங்கை, குமிலம் போன்ற மரங்களும் நிறைந்த காடுகள் உள்ள மலைப் பிரதேசமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த குறிஞ்சி நிலத்தின் ஒரு பகுதியான கொல்லிமலையின் வேட்டுவர்குடி அரசன் கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரியின் வரலாற்றை இங்கு நாம் பார்ப்போம்.

கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரி மிகச் சிறந்த மன்னன். கொல்லிமலையை ஆண்டு வந்தார். வேட்டுவர் குடியில் பிறந்த இவர் மிகச் சிறந்த வில்லாற்றல் உடையவராகவும், கொடைத் தன்மை மிக்கவராகவும், சிவ பக்தராகவும் விளங்கினார். இவர் மழவர் என்று சங்க இலக்கியங்கள் போற்றும் இளமையான, அழகுமிக்க, கம்பீரமானவர். இவர் பல போர்களில் வெற்றி பெற்றுள்ளார். இவருடைய தந்தை வேட்டுவ மன்னர் ஆதன் ஆவார். (புறநானூறு 153).

### ❖ வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரி ஆட்சி செய்த நாடுகள் :

வளப்பூர் நாடு, வாழவந்தி நாடு, திண்ணனூர்நாடு, சேலூர் நாடு, அரியூர் நாடு, குண்டூர் நாடு, தேவானூர் நாடு, குண்டுனி நாடு, ஆலந்தூர் நாடு, திருப்புலி நாடு, எடப்புலி நாடு, சித்தூர் நாடு, பைல் நாடு, பெரக்கரை நாடு, (ஒவ்வொரு நாடும் ஒரு கிராம ஊராட்சியை குறிக்கிறது) என 14 நாடுகள் உள்ளன. இந்த 14 நாடுகளை, கொல்லிமலையை தலைமையிடமாகக் கொண்டு வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரி ஆட்சி செய்து வந்தார்.





## ❖ போர்களில் வெற்றி

ஓரி என்ற குதிரை மேல் ஏறி ஓரியும், காரி என்ற குதிரை மேல் ஏறி காரியும் போரிட்டு காரியை வென்று காரியின் குறும்பொறை நன்நாடு முழுவதையும் கோடியர்க்கு அதாவது யாழ் மீட்டும் பாணர்க்கு பரிசளித்தார். இதன் மூலம், வல்வில் ஓரியின் வீரத்தையும், தமிழ்ப்பற்றையும் புலவர்களுக்கு வான்போல் வரையாது வழங்கும் வள்ளல் தன்மையும் நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் இவர் பலமுறை காரியை போரில் வென்று அவரது நாடுகளை கவர்ந்து புலவர்களுக்கு பரிசாகக் கொடுத்துள்ளார். (சிறுபானாற்றுப்படை வரி 107- 110)

## ❖ மழவர் ( இளமையானவர் )

சங்க இலக்கியங்களில் அரசர்களைப் புகழ்ந்து பாடும்போது அவர்களின் இளமை, அழகு மற்றும் திறமைகளை பாடுவது இயல்பு. அவ்வாறு புலவர்கள் வல்வில் ஓரியை மழவர் கோமான் என்று அவரின் இளமையை புகழ்ந்து பாடி

உள்ளார்கள். வல்வில் ஓரி மிக இளமையான அழகு உடையவர், கூர்மையான அறிவாற்றலும், மிகச்சிறந்த வில்லாற்றலும் மிக்கவர். இத்தகைய சிறப்பு மிக்க வேட்டுவ அரசர் வல்வில் ஓரியின் புகழை சங்க கால புலவர்கள் பலர் பாடியுள்ளனர். (நற்றிணை 52 பாலை)

## ❖ வீரம்

ஒருமுறை வல்வில் ஓரி போர் பயிற்சி செய்ய காட்டு விலங்குகளை வேட்டையாடுகிறார் அப்பொழுது அவரை சுற்றி யானை, புலி, மான், பன்றி, உடும்பு, ஆகிய ஐந்து வகை விலங்குகள் இருப்பதைக் கண்டு அந்த ஐந்து விலங்குகளையும் ஒரே அம்பு விட்டு வேட்டையாடுகிறார். இவ்வாறு அவர் போர் பயிற்சியில் திறமையாக வேட்டையாடியதை அறிந்த நமக்கு அவர் போர்க்களங்களில் எவ்வாறு போர் செய்திருப்பார் என்பதை நினைக்கும்பொழுது மிகப் பெரிய வியப்பு உண்டாகிறது. நமக்கே இப்படி என்றால் அதை நேரடியாக பார்த்த பாணர்களுக்கு தன் தொழிலான இசை இசைப்பது மற்றும் பாடுவதை மறந்து மெய்மறந்து நின்றதில் வியப்பேதும் இல்லை. (புறநானூறு 153).

## ❖ கொடை

போரில் தான் வெற்றி பெற்ற காரியின் குறும்பொறை நாட்டை கோடியர்க்கு தானமாக கொடுத்தார். தான் வேட்டையாடிய விலங்குகளை தன் கையால் சுட்டு, தேனுடன் கலந்து சிறந்த உணவாக அங்கு வந்த பாணர்களுக்கு கொடுத்தார். தன்னிடம் பொருள் வேண்டி வந்தவர்களுக்கு வரையாது



பொன்னால் அலங்கரிக்கப்பட்ட யானைகளையும், முத்து மாலைகளையும் பரிசளிப்பார். பெண்கள் விரும்பி அணியும் பொன்னால் செய்த குவளை மலர்களை விறலியர்களுக்கு (பாணர்களின் மனைவிகள்) பரிசளிப்பார். இவ்வாறு தன்னை காண வரும் அனைவருக்கும் வானம் போல் வரையாது வழங்கிய வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரி தன் மக்களுக்கும், தமிழ் புலவர்களுக்கும் வாரி வழங்கும் வள்ளலாக வாழ்ந்துள்ளார்.
(சிறுபானாற்றுப்படை வரி 107 - 110)
(கொங்குமண்டல சதகம் 43)
(புறநானூறு 152,153)

## ❖ வணிகம்

மாமன்னர் வல்வில் ஓரி மேலைநாட்டு வணிகர்களுடன் தொடர்பு வைத்திருந்தார். மக்கள், கொல்லிமலையில் கிடைத்த எண்ணற்ற விலை மதிப்பு மிக்க பொருட்களைக் கொண்டு மிகவும் சந்தோசமாக வாழ்ந்தனர். தங்களின் இயற்கை வளங்கள்களையும் பாதுகாத்து வந்தனர். பக்கத்துநாடு மற்றும் வெளிநாட்டு மக்கள் வியாபார நோக்கில் கொங்கு மண்டலத்தில் நுழைந்தனர். குறிஞ்சி நிலத்தில் இருந்த அரிய பொருட்களான ஈட்டி, வேங்கை, குமிழ் மரம், சந்தனமரம் போன்ற மரங்கள்,

யானைத் தந்தம், மான்தோல், புலித்தோல், மயிலிறகு, போன்றவை மட்டுமல்லாமல் வாசனை திரவியங்கள், தங்கம், வைரம், நீலகற்கள், சிவப்பு கற்கள், மற்றும் இரும்புத்தாது, போன்ற பொருட்களை பண்டமாற்று முறையில் வெளிநாட்டு வணிகர்களிடம் வணிகம் செய்து வந்தனர். யவனர்கள் வெளிநாடுகளில் இருந்து மணிகள், குதிரைகள், மதுபானம் போன்றவற்றை நம் மக்களுக்குக் கொடுத்து பண்டமாற்று முறையில் வணிகம் செய்தனர். இதன்மூலம் முத்துமாலை, பொன்னால் செய்த குவளை மலர், வெள்ளி போன்றவை வேட்டுவ மன்னன் வல்வில் ஓரிக்கு கிடைத்துள்ளது. இவர் கையில் கடகம் அணிந்திருப்பார். யவனர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்ததாகவும் யவனசேரிகள் தமிழ்நாட்டில் இருந்ததாகவும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் வணிகத்தில் பயன்படுத்திய காசுகள், ஓடுகள், மணிகள் போன்றவை கொடுமணல் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. எகிப்தின் கசீர் அல் கடீம் என்னும் இடத்தில் ஓரிபானை என்று எழுதப்பட்ட பானை ஓடு கிடைத்துள்ளது. இதன் மூலம் வல்வில் ஓரியின் வேட்டுவ மக்கள் மேலைநாடுகளுடன் தொடர்பில் இருந்தனர் என்பதை தெரிந்து கொள்ள முடியும்.




# Tamil Brahmi script in Egypt

**Exciting archaeological discovery with implications of import**

Special Correspondent

**CHENNAI:** A broken storage jar with inscriptions in Tamil Brahmi script has been excavated at Quseir-al-Qadim, an ancient port with a Roman settlement on the Red Sea coast of Egypt. This Tamil Brahmi script has been dated to first century B.C. One expert described this as an "exciting discovery."

The same inscription is incised twice on the opposite sides of the jar. The inscription reads *paanai oRi*, that is, pot (suspended) in a rope net.

An archaeological team belonging to the University of Southampton in the U.K., comprising Prof. D. Peacock and Dr. L. Blue, who recently re-opened excavations at Quseir-al-Qadim in Egypt, discovered a fragmentary pottery vessel with inscriptions.

Dr. Roberta Tomber, a pottery specialist at the British Museum, London, identified the fragmentary vessel as a storage jar made in India.

Iravatham Mahadevan, a specialist in Tamil epigraphy, has confirmed that the inscription on the jar is in Tamil written in the Tamil Brahmi script of about first century B.C.

In deciphering the inscription, he has had the benefit of expert advice from Prof. Y. Subbarayalu of the French Institute of Pondicherry, Prof. K. Rajan of Central University, Puducherry and Prof. V. Selvakumar, Tamil University, Thanjavur.

According to Mr. Mahadevan, the inscription is quite legible and reads: *paanai oRi*, that is, 'pot (suspended in) a rope net.' The Tamil word *uRi*, which means rope network to suspend pots has the cognate *oRi* in Parji, a central Dravidian language, Mr. Mahadevan said. Still nearer, Kannada has *oTTi*, probably from an earlier *oRRi* with the same meaning.

The word occurring in the pottery inscription found at Quseir-al-Qadim can also be read as *o(R)Ri* as Tamil Brahmi inscriptions generally avoid doubling of consonants.

Earlier excavations at this site about 30 years ago yielded two pottery inscriptions in Tamil Brahmi belonging to the first century A.D.

Another Tamil Brahmi pottery inscription of the same period was found in 1995 at Berenike, also a Roman settlement, on the Red Sea coast of Egypt, Mr. Mahadevan said.

These discoveries provided material evidence to corroborate the literary accounts by classical Western authors and the Tamil Sangam poets about the flourishing trade between the Tamil country and Rome (via the Red Sea ports) in the early centuries A.D.

**SIGNIFICANT POINTER:** *Potsherd with Tamil Brahmi inscription, circa first century B.C., found in Egypt.* – PHOTO: DR. ROBERTA TOMBER, BRITISH MUSEUM

## ❖ பக்தி

வல்வில் ஓரி வீரத்திலும் கொடையிலும் மட்டுமல்லாமல் பக்தியிலும் சிறந்து விளங்கியுள்ளார். சிறந்த சிவ பக்தரான வல்வில் ஓரி ஒருமுறை போர் பயிற்சிக்காக வேட்டையில் ஈடுபட்டிருந்த போது ஒரு வெண்பன்றியைக் கண்டு அதை துரத்திச் சென்றார். புதரின் மறைவிற்கு சென்ற பன்றியின் மீது அம்பெய்தார். புதருக்குள் சென்று பார்த்த போது அங்கு வெண்பன்றிக்கு பதிலாக ஒரு சிவலிங்கம் இருப்பதை கண்டார். வந்தது பன்றியல்ல சிவபெருமானே என்றெண்ணி அவ்விடத்திலேயே சிவனுக்கு கோவில் கட்ட முடிவு செய்த வல்வில் ஓரி, கைலாசநாதர் கோவிலை எழுப்பினார். இக்கோவில் இராசிபுரத்தில் அமைந்துள்ளது. இதற்குச் சான்றாக இக்கோவிலின்




இராசிபுரத்திலுள்ள ஸ்ரீ கைலாசநாதர் கோவிலில் உள்ள வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரி சிலை

கொடிமரத்தில் பன்றியின் உருவமும், மன்னரைக் குறிக்கும் வகையில் வாள், மற்றும் கேடயமும் வடிக்கப்பட்டுள்ளது. இக்கோவிலில் வேட்டுவ மாமன்னர் வல்வில் ஓரியின் திருவுருவ சிலையும் வைக்கப்பட்டுள்ளது.

கட்டுரையாளர்

**இராஜவேட்டுவன்**

.




7 வள்ளல்கள் ஆண்ட இடங்கள் – நிலப்படம்

# நிறுவனத்தில் பயிற்சியும் வளர்ச்சியும்




வணிகத்தில் ஒருவர் தன்னை சக்கரவர்த்தியாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்றால் அவர் முதலில் தனது தொழிலாளர்களுக்கு அவர்கள் சார்ந்த தொழில்துறையில் குறைந்தது வருடத்திற்கு எட்டு மணி நேரமாவது பயிற்சியளித்து இருக்க வேண்டும். இது கடைக்கோடி ஊழியர் முதல், முதன்மை ஊழியர் வரை அனைவருக்கும் பொதுவானது. இவ்வாறு பயிற்சி அளிப்பதன் மூலம் அங்கு புதிதாக இணையும் தொழிலாளர்கள், அந்த தொழிலைப் பற்றியும், அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களைப் பற்றியும், அவர்களது வேலை கலாச்சாரத்தைப் பற்றியும் எளிதில் தெரிந்து கொண்டு தங்களது முழுமையான பணியை சிறப்பாக செய்ய முடியும். அதே போல் பணியாளராக வேலை செய்யும் ஒவ்வொருவரும் தங்களுடைய தனித் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும். மேலும் புதியதாக சில திறமைகளை வளர்த்தெடுத்துக் கொண்டு முன்னேற முடியும்.

வளர்ந்து வரும் இந்த நவீன உலகத்தில் பல புதிய தொழில் நுட்பங்களை கற்றுக் கொண்டால் மட்டுமே அந்த தொழிலாளர்கள் சிறப்பாக வேலை செய்யமுடியும். ஒவ்வொரு துறையிலும் பணிபுரியும் பணியாளர்கள் குறிப்பாக மனிதவள மேம்பாட்டு துறை, மார்க்கெட்டிங், அக்கவுண்ட்ஸ் போன்ற துறைகளில் இருப்பவர்கள் தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொண்டால் துறை சார்ந்த தவறுகளை தவிர்க்க முடியும். தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை மிகத் திறமையானவர்களாகவும், மகிழ்ச்சியானவர்களாகவும், எந்த ஒரு நிறுவனம் வைத்துள்ளதோ அவர்களே வணிகத்தில் மேலும் வளர்ச்சியடையக் கூடிய நிறுவனமாக உள்ளார்கள்.

பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஒரு துறையில் மட்டும் வல்லுனராக இல்லாமல் பல துறையில் வல்லுனராக இருந்தால் அவர்களால் பல பேர் செய்ய வேண்டிய வேலையை ஒருவரே செய்யக்கூடிய வாய்ப்பை உருவாக்கலாம். குறிப்பாக பல மொழி தெரிந்தவர்கள் புதிதாக வரும் வாடிக்கையாளர்களிடம் எளிதாக பேசமுடியும். கணினி தொழில்நுட்பம், தட்டெழுத்து, மொழிபெயர்ப்பு போன்ற வேலைகளுக்கு இரண்டு அல்லது மூன்று திறமைகளை ஒருவருக்கு கற்றுக்கொடுத்து, தனித்தனியாக ஆட்களை வேலையில் அமர்த்துவதை தவிர்க்கலாம்.



ஒவ்வொருவரும் கண்டிப்பாக தனது தொழிலாளர்களை திறமை மிக்கவர்களாகவும் பல துறைகளில் கைதேர்ந்தவர்களாவும் பயிற்சி அளித்து அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் நமக்கு சிறந்த உற்பத்தி திறன் கிடைக்கிறது. புதிதாக வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை தனது தொழிலாளர்கள் கையாளும் வகையில் அவர்களுக்கு தேவையான பயிற்சியை கொடுத்தால் மட்டுமே, அவர்களால் அந்த நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்ப வேலை செய்ய முடியும் அதன் மூலமே நமது புதிய தொழில்நுட்பத்தை சரியான முறையில் பயன்படுத்த முடியும்.அவ்வாறு செய்யாமல் தொழிலாளருக்கு போதிய பயிற்சி அளிக்கவில்லை என்றால் அவர்களால் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடியாது. அதனால் தொழிலின் வளர்ச்சிக்கு தடையாக இருக்க நேரிடும். ஆகையால் வணிக முதலாளி ஆகிய நீங்கள் அனைவரும் உங்கள் நிறுவனத்தில் உள்ள சாதாரண தொழிலாளி முதல் உயர்மட்ட ஊழியர் வரை அனைவருக்கும் அவர்கள் சார்ந்த தொழில் பயிற்சியை சிறப்பாக அளிப்பதன் மூலம் நாம் வணிகத்தில் மென்மேலும் வளர்ச்சி அடைய முடியும்.



# தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதால் ஏற்படும் நன்மைகள்

1. நமது நிறுவனத்தில் கொண்டு வரப்படும் புதிய தொழில்நுட்பத்தை சரியான முறையில் கற்றுக் கொடுத்து உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

2. தொழிலாளியை ஒன்றுக்கு மேற்பட்ட திறமைகளை கற்றுக் கொள்ள செய்வதன் மூலம் புதிதாக வேலைக்கு ஆள் சேர்ப்பதைத் தவிர்க்கலாம்.

3. நமது நிறுவனத்தில் புதிதாக இணையும் தொழிலாளிக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் அவர், நமது நிறுவனத்தின் கலாச்சாரம், தொழில்நுட்பம் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு எளிதாக வேலை செய்ய முடியும்.

4. தொழிலாளர்களின் தன்னம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அதிகரித்து அவர்களின் வேலைத் திறனை அதிகரிக்க முடியும்.

5. முறையான பயிற்சி அளிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்குள் ஒரு ஒருங்கிணைப்பை உருவாக்க முடியும்.

6. முதலாளிகளின் புதிய திட்டங்களை தங்களது தொழிலாளர்களுக்கு சரியான பயிற்சியளிப்பதன் மூலம் தனது திட்டங்களை திறம்பட வெற்றியடைய செய்ய முடியும்.

கட்டுரையாளர்



**Dr. D. Valai Parameswaran, MD,**
PGCIH,FICM,PGDEM,DFID,PGDIP.Endo(UK)
Six Sigma & Green Belt Certificate Holder

# வேட்டுவ அரசர்கள்

- வல்வில் ஓரி (கொல்லி மலை தலைவன்)
- வேள் பாரி (பரம்பு மலைத் தலைவன்)
- பேகன் (பொதிய மலைத் தலைவன்)
- அதியமான் (தகடூர் வேட்டுவர் குலத் தலைவன்)
- கடியநெடு வேட்டுவன் (கொடைக்கானல் மலை தலைவன்)
- வேள் ஆய் அண்டிரன் (பொதிய மலை தலைவன்)
- ஆய் எயினன் (பழனிமலை தலைவன்)
- சோழப்பேரரசி செம்பியன்மகாதேவி (கொல்லிமலையில் இருந்து கண்டராதித்த சோழனுக்கு மணமுடிக்கப்பட்டவர், கொல்லிமலையை ஆண்ட வேட்டுவராஜாவின் மகள்)
- கொங்கு சக்கரவர்த்தி தலையூர் காளிமன்னன் (அண்ணமார் கதையின் வெற்றித்திருமகன்)
- அல்லால இளைய நாயகன் (ஜேடர்பாளையம் அணை மற்றும் இராஜ வாய்க்கால் வெட்டியவர்)
- செயங்கொண்ட சோழ கொங்காள்வான் (கொடிவேரி அணை கட்டியவர்)
- காளிங்கராயன் (காளிங்கராயன் அணை கட்டிய பட்டயம்)

# வேட்டுவ அரசர்கள்

- சுந்தர பாண்டிய வீர சிங்க மன்னன் (புல்ல வேட்டுவர் வெங்கம்பூர் மேல் கரை அரைய நாடு)
- செய்யான் பல்லவராயர்
- மட்டுகடங்கா கொங்கு ராயர்
- செய்யான் பல்லவராயர் (கொங்கு மண்டல சதகம்)
- கொடுமுடி (வடகரையாத்தூர் நடுகல்)
- வில்லி வேட்டுவ ராஜா (ஸ்ரீவில்லிபுத்தூர்)
- வேள் ஆய் இனியன்
- சிறுத்தலை வேட்டுவ ராஜா
- திரு.கஜேந்திர மகாராஜன் (காஞ்சிபுரம் செப்பேடு)
- வீர வெஞ்சமன்
- குன்னி வேட்டுவ ராஜா
- நீலிய கூடன்
- கண்டீரக் கோப்பெருநள்ளி (தோட்டி மலை தலைவன், தோட்டிமலை - கோவை, மேட்டுபாளையம் அருகில் உள்ளது)
- குமணன் (முதிர மலை தலைவன், முதிர மலை - கோவை, உடுமலை அருகில் உள்ளது)

# வேட்டுவ அரசர்கள்

- பிட்டன் கொற்றன் (குதிரை மலை தலைவன், குதிரை மலை – சேலம் பகுதில் இருக்கின்ற மலை)
- இருங்கோவேள் (கொடும்பூர் வேட்டுவ குல தலைவன்)
- பழையன்,பழையன் மாறன், பாண, வாண மன்னர்கள் (தமிழகத்தின் வட பகுதியை ஆண்டவர்கள்)
- கவினி (இலங்கையின் முதல் அரசி)





**அடுத்த இதழில்**

தலையூர்காளி கோவிலின் பரம்பரை பட்டக்காரர் உயர்திரு. ஆண்டமுத்து வள்ளல் அவர்கள் எழுதும் அருள்மிகு பெரிய நாயகி அம்மன் (காளி தேவி) திருக்கோவில் அமைப்பும்... திருத்தல வரலாறும்...

VettuvarTV

VettuvarTV

https://youtube.com/c/VettuvarTV

VG BUSINESS Tycoons

9003795243

VG HELP LINE



வேட்டுவக் கவுண்டர் வணிக மேம்பாட்டு அமைப்பு
VG BUSINESS TYCOONS
வழங்கும்
ஆடி 18
வேட்டுவ மாமன்னர்
வல்வில் ஓரி விழா
வேட்டுவர் டிவி யில் சிறப்பு
பட்டி மன்றம்
வேட்டுவ சமுதாய முன்னேற்றத்திற்கு பெரும் பங்கு வகிப்பது
வணிகமா...? வேலை வாய்ப்பா...?
சிறப்புரை திரு. சலங்கை துரை, திரைப்பட இயக்குநர்
நடுவர்
மோகூர் வேட்டுவ காளி மைந்தன்
திரு. வாழவந்தி நாடு சரவணன்
வணிகமே...!!!
திரு. சிவ இளங்கோ
இன்சூரன்ஸ் பேக்ட்ரி
கோவை
திரு. மூர்த்தி கவுண்டர்
எம்ஜி கைனடிக் ஆர்ட்ஸ்
கோவை
திரு. நிஷாந்த்
நிசாந்த் ஸ்போர்ட்ஸ் கார்மெண்ட்ஸ்
திருப்பூர்
வேலை வாய்ப்பே...!!!
வழக்கறிஞர்
திரு. பாஸ்கரன்
கரூர்
திரு. பிரகாஷ்
குணா எண்டர்பிரைசஸ்
கரூர்
திரு. வெற்றி விகாஷ்
திருமலா ஸ்டுடியோ
திருச்செங்கோடு